**ஹட்டன் திக்ஓய நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹட்டன் திக்ஓய நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181(I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹட்டன் திக்ஓய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந ் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் -சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுக்குரிய ரூபா 144,123 ஆன சீராக்கங்கள் மிகை மற்றும் பற்றாக்குறை கணக்கிற்கு (திரண்ட நிதியத்திற்கு) சீராக்கம் செய்யாமல் மீளாய்வாண்டின் கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | இந்த நாட்குறிப்புக்கள் இவ்வாண்டுக்குரியதாக சீராக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் இதன் பிறகு அவ்வாறான பதிவுகள் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டின் செலவினம் திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | நகரசபையால் அடுத்த ஆண்டுக்காக உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா. 3,542,935 ஆன கடன் தொகை நடைமுறைப் பொறுப்பாக ஐந்தொகையில் காண்பிக்காமல் நீண்ட கால பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய முழுக் கடன் தொகையில் உள்ளடக்கம் மாதாந்தம் இரண்டு கடன் தவணைகளும் காலாண்டில் மேலும் ஒரு கடன் தவணையும் கொடுப்பனவு செய்யும் போது மொத்தத் தொகையில் படிப்படியாக குறைவடைவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன் மூலதனம் நீண்டகால மற்றும் குறுங்காலம் என இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) நிதிக்கூற்றுக்களில் ரூபா 258,777 ஆன வருமானமும் ரூபா 896,559 ஆன பொறுப்புக்களும் ரூபா 162,392 ஆன செலவினங்களுமாக 03 சந்தர்ப்பங்களின் போது மொத்தம் ரூபா.1,317,778 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்குகளில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் நானாவிதக் கடன்பட்டோர் வீட்டு வாடகை மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ஆகிய 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 10,060,348 மற்றும் அதற்குரிய பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,933,812 ஆக இருந்ததால் ரூபா 126,536 ஆன வேறுபாடு காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்கு மீதிகளில் வேறுபாடு தொடர்பாக ஆராய்ந்து பார்த்து உரிய அட்டவணைகள் அல்லது நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,292,731 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,190,887 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவையில் ரூபா 8,553,698 தொகையும் மீளாய்வாண்டில் பட்டியலிடப் பட்ட வீதவரிகளில் ரூபா 4,654,938 தொகையும் 2520 | கொடுப்பனவு செய்யாதவர் களுக்கு சிவப்பு அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலகுகளில் இருந்து 252 நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் வீத வரி அறவீட்டின் செயன்முன்னேற்றம் போதியளவில் காணப்படவில்லை. | | |
| **(ஆ)** | **ஏனைய வருமானம்** | | |
| (i) | நகர சபையினால் நடாத்திச் செல்லப்பட்ட முச்சக்கரவண்டி வருமான பதிவேட்டின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை முச்சக்கர வண்டி கட்டணங்களின் நிலுவை ரூபா 4,498,231 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய முச்சக்கர வண்டி கட்டண வருமானம் கணக்கிடப்பட்டோ அல்லது கணக்கு வைக்கப்பட்டோ இருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் போது பதிவுக் கட்டணங்களை செலுத்தாத நபர்களுக்கு உரிய நிலுவை கட்டணங்களைக் கொடுப்பனவு செய்யுமாறு அறிவித்து ரூபா 300,000 அறவிடப்பட்டுள்ளதாகவும் அதிகரிக்கப்பட்ட கட்டணங்களை செலுத்த முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் தமது விருப்பமின்மையைத் தெரிவித்து இருந்ததுடன் அவர்கள் இக்கட்டணங்களை நியாயமாகக் குறைத்துத் தருமாரு நகரசபைக்கு வேண்டுகோள் விடுத்திருந்த போதும் இதுவரை கட்டணங்களை குறைப்பதற்கு நகரசபை தீர்மானம் எடுக்காமையால் இக்கட்டணங்கள் அறவிடப்படவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுதல் வேண்டும். |
| (ii) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 1,581,710 ஆன நிலுவை வாடகைக் கட்டணம் 2022 பெப்ரவரி 02 கணக்காய்வுத் திகதி வரையும் அறவிடப் பட்டிருக்கவில்லை.. | வாடகையைக் கொடுப்பனவு செய்யுமாறு பல தடவை அறிவிக்கப்பட்டிருந்த போதும் வாடி வீடு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நிலுவை வாடகையைக் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அது நிறைவேற்றப்படாமையால் சபையினால் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கடன் தொகையொன்று எடுத்து வாடி வீட்டை நவீன மயப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் நிலுவைத் தொகையைக் கொடுப்பனவு செய்து முடிக்குமாறு 2022 மே 30 ஆம் திகதி வாடிவீட்டு உரிமையாளருக்கு மீண்டும் தெரிவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டின் போது மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண அமைச்சின் நிதிஏற்பாடுகளில் ரூபா 1,964,375 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட உயிரியல் வாயு உற்பத்தி செயற்திட்டம் முறையான ஆய்வொன்று மேற்கொள்ளாமல் நிர்மாணிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் நவம்பர் 25 கணக்காய்வுத் திகதி வரை 06 வருடங்களாக விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த உயிரியல் வாயுப் பிரிவு நகரில் சன நடமாட்டமுள்ள இடமொன்றான பேருந்து நிறுத்து மிடத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள இடம் உயிர்வாயு உற்பத்திக்குப் பொருத்தமற்றதாக உள்ளதால் இச்செயற்திட்டம் வெற்றிகரமாக அமையவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | உயிரியல் வாயு அலகினை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக 50 சேவையாளர்களுக்காக ரூபா 123,154,983 ஆன சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த துடன் 01 லொறி வண்டி மற்றும் 03 உழவு இயந்திரங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு எரிபொருள் மற்றும் திருத்த வேலைகளுக்காக ரூபா 1,909,367 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 2375 மெற்றிக் தொன் உக்கும் கழிவுப் பொருட்களை மற்றும் 4 மெற்றிக் தொன் உக்காத கழிவுகள் அகற்றப்பட்டிருந்ததுடன் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலைய மொன்று சபை பிரதேசத்தில் இனங்காணப்படாமையால் மஸ்கெலிய, தலவாக்கல மற்றும் அக்குரண சபைகளுக்கு ரூபா 2,054,150 தொகை மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமாகக் காணப்படும் 2 கிலோமீற்றர் அளவிலான காணியில் கழிவுப்பொருள் முகாமைத்துவம் செய்வதற்கான இடவசதிகள் இல்லையென்பதால் இவ்வாறு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளள தாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கிரயத்தை குறைக்கக்கூடிய வகையில் திண்மக்கழிவு முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட வேண்டும். |